DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**OS.No : 295/2021 PW : 2**

Name : ராமகிருஷ்ணன் Age -

Father's Name Village

Taluk Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 14.09.2022

**முதல் விசாரணை**

நான் வாதி தரப்பு சாட்சி 2 ஆவேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பானை வந்தது. நான் தற்போது சென்னையில் உள்ள ட்ரூட்த் லேப் என்ற பதிவு பெற்ற தனியார் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆவண ஆய்வு பிரிவில் இயக்குநராகவும், ஆவண ஆய்வு வல்லுநராகவும் கடந்த 2010ம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறேன். இதற்கு முன் நான் சென்னையில் உள்ள அரசு தடய அறிவியல் ஆய்வகத்தல் ஆவண ஆய்வக பிரிவில் உதவி இயக்குநராகவும், ஆவண ஆய்வு வல்லுநராகவும் சுமார் 36 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றேன். ஆவண ஆய்வில் எனக்கு 2 ஆண்டுகள் சிறப்பு பயற்சி அளிக்க்கப்பட்டது. ஆவண ஆய்வில் சுமார் 52 வருட அனுபவம் இருக்கிறது. வாதி எங்கள் அனுவலகத்தை அணுகி அ.வ.எண். 432/1997 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சமாதான உடன்படிக்கையின் சான்றிடப்பட்ட ஜெராக்ஸ் நகலை அதில் உள்ள வள்ளி என்ற கேள்விக்குரிய கையொப்பங்களை 14.05.1993 தேதியிட்ட 2119/1993 என்ற ஆவணத்தில் உள்ள வள்ளி என்பவரது

கையொப்பங்களுடன் ஒப்பீடு செய்துதர கோரி விண்ணப்பம் கொடுத்தார். மேற்கூறிய கேள்விக்குரிய ஆவணத்துடன் ஒப்பிட்டு பார்ப்பதற்காக திருமதி. வள்ளி என்பவரின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பம் அடங்கிய 22.05.1995 தேதியிட்ட பதிவுசெய்யப்பட்ட ஆவணம் 2401/1995, ஆவணத்தை கொடுத்தார். அதில் உள்ள அவரின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பத்தை ஏ1 என்று குறியீடு செய்தேன். அவரிடமிருந்து பெறப்பட்ட மாதிரி கையொப்பங்கள் மற்றும் கையெழுத்துக்கள் அடங்கிய தாள் ஒன்றும் 11.11.2020 அன்று தேதியிட்ட ஆவணத்தை என்னால் பெற்றபட்டது. அதில் காணப்படும் வள்ளி என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்துக்களை எஸ்1 முதல் எஸ்14 வரை குறியீடு செய்தேன். 21.11.2020 அன்று மற்றொரு விண்ணப்ப கடிதத்துடன் அவரால் கையொப்பம் இடப்பட்ட கீழ்கண்ட மாதிரி ஆவணங்களை பெற்றேன்.

1. சான்றிடப்பட்ட 14.05.1993 தேதியிட்ட கிரைய ஆவணம். அதில் உள்ள வள்ளி என்ற கையொப்பங்களை ஏ2 மற்றும் ஏ3 என்று குறியீடு செய்தேன்.

2. ஸ்ரீமான் மத்வ சித்தாந்த அன்னாஹினி நிரந்தர நிதி லிமிடெட் திருவல்லிக்கேணியில் அடமான செய்யப்படும்போது வைப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களின் பட்டியலை கொண்ட ஒரு ஜெராக்ஸ் நகலை வாதி கொடுத்தார் அதில் உள்ள கையொப்பத்தை ஏ4 என்று குறியீடு செய்தேன்.

3. எம்.சி.ஓ.பி. 2100/2017 வள்ளி என்பவர் ஜூலை 2018ல் தாக்கல் செய்த அபிடவிட்டில் ஜெராக்ஸ் நகலை பெற்றேன். அதில் உள்ள அவர்

கையொப்பங்களுக்கு ஏ5 மற்றும் ஏ6 என்று குறியீடு செய்தேன்.

மேற்கூறிய கேள்விக்குரிய ஆவணத்தில் காணப்படும் ஆர். வள்ளி என்ற கையொப்பங்களை அவரது மாதிரி கையொப்பங்கள் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களுடன் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு பார்த்து கவனமாக ஆராய்ந்து கீழ்கண்ட கருத்தை வழக்கினேன்.

கருத்து எஸ்1 முதல் எஸ்14 மற்றும் ஏ1 முதல் ஏ6 வரை என்று குறியீடு செய்யப்பட்ட மாதிரி மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்கள் மற்றும் கையெழுத்துக்களை எழுதிய நபர் கேள்விக்குரிய சான்றாவணத்தில் க்யூ1 முதல் க்யூ6 வரையுள்ள கையொப்பங்களை இடவில்லை. இவைகளில் பல்வேறு கையெழுத்து குணாதிசயங்களில் ஒன்றோடு ஒன்று வித்தியாசபடுகிறது. மேற்கூறிய கருத்துசம்பந்தமாக நான் வழங்கிய அறிக்கை 02.12.2020 தேதியிட்டதாகும். மேற்கூறிய அறிக்கையுடன் எனக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களையும் ஆய்வு காலத்தில் என்னால் தயாரிக்கப்பட்ட, பெரிதாக்கப்பட்ட புகைப்பட கையொப்பங்கள் அடங்கிய ஒப்பீட்டு பட்டியலை அளித்திருக்கிறேன். நான் கொடுத்த அறிக்கை அடங்கிய கோப்பு வா.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...</u>**

ஆர். வள்ளி என்ற 4 எழுத்துக்கள் கொண்ட கையொப்பங்களை மட்டும் ஒப்பீடு செய்ய வாதி என்னை கேட்டுக்கொண்டார். கையொப்பங்களை ஒப்பிட்டு

கொடுக்கும்படி காவல் துறையில் இருந்து வேண்டுகோள் எதுவும் வரவில்லை. அறிக்கை அளிப்பதற்கு முன்பு வாதிக்கு நான் எழுத்துபூர்வமான கடிதம் எதுவும் எழுதிவில்லை. வா.சா.ஆ.2ல் 7வது பக்கத்தில் அரைபக்க தாளில் உள்ள ஆர். வள்ளி என்பதை ஏ1 என்று குறியீடு செய்துள்ளேன். அந்த கையொப்பத்தையும் சர்ச்சைக்குரிய கையொப்பத்துடன் ஒப்பீடு செய்தேன். ஏ1 என்று குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தின் முழு ஆவணத்தை வாதியிடம் கேட்டேன். அவர் தேடி பார்த்ததில் அவர் கிடைக்கவில்லை என்று சொன்னார். அந்த விவரத்தில் என்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் வாதி கொடுத்த வேண்டுகோள் கடிதத்திலிலேயே முழு ஆவணம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். அந்த ஆவணம் சார்பதிவாளர் அலுவலத்தில் இருக்குமா என்று கேட்டால் இருக்கலாம். சார்பதிவாளர் அலுவலகத்தில் அந்த ஆவணத்தை தேடி கொண்டுவருமாறு வாதியிடம் கேட்கவில்லை. அது என் வேலையும் இல்லை. என் அறிக்கையின் 7வது பக்கத்தில் ஆர்.வள்ளி என்று 2 கையொப்பங்கள் இருக்கிறது. அந்த 2 கையொப்பங்களிலும் ஆர் என்ற ஆங்கில எழுத்தில் வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னால் அதில் வித்தியாசம் இல்லை. அது இயற்கையான மாறுபாடு ஆகும். அந்த 2 கையொப்பங்களும் சமகாலத்தில் போடப்படாததால் இயற்கையான மாறுபாடு இருக்கிறது. ஏ1 என்ற குறியீடு செய்யபட்ட கையொப்பத்திற்கும் அதே பக்கத்தில் உள்ள ஆர். வள்ளி என்ற கையொபத்தில் ஒவ்வொரு எழுத்திற்கும் வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால்

அது இயற்கையான வேறுபாடு ஆகும். கையொப்பம் இடும் முறையை ஆய்வு செய்து பார்த்தபோது வாதி படிப்பறிவு இல்லதவர் என்பதால் பொதுவாக அவ்வாறு கையொப்பம் இடும் நபர்கள் கையொப்பங்களில் மாறுபாடு இருக்காது. பக்கம் 7ல் உள்ள கையொப்பங்களுக்கும் பக்கம் 9ல் உள்ள கையொப்பங்களுக்கும் இடையே ஒவ்வொரு கையொப்பத்திலும் வேறுபாடு இருக்கிறது என்று சொன்னல் சரியல்ல. இயற்கையான மாறுபாடு தான் இருக்கிறது. 'ளி' என்ற எழுத்தில் மாறுபாடு இருக்கிறது என்று சொன்னால் அது இயற்கையான மாறுபாடு ஆகும். யாராலும் சரியாக ஒரே மாதிரி கையொப்பம் போடமுடியாது. வாதியை எங்கள் ஆய்வகத்திற்கு நாங்கள் அழைக்கவில்லை அவராக தான் வந்தார். என்னுடைய அறிக்கையின் 2வது பக்கத்தில் வாதியை எங்கள் ஆய்வகத்திற்கு கூடுதல் ஆவணங்களை கொண்டுவரும்படி நாங்கள் வேண்டுகோள் கொடுத்ததாகவோ அதன் அடிப்படையில் எங்கள் ஆய்வகத்திற்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன என்ன கூடுதல் ஆவணங்கள் தேவைப்படுகிறது என்று விவரத்தை நாங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை. வாதி கொடுத்த வேண்டுகோள் கடிதத்திலேயே அது குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய அறிக்கையின் 3வது பக்கத்தில் வாதி நாங்கள் கேட்க ஆவணத்தின் முழு ஆவணத்தை தேடி கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்ன பின்னர் நான் இருக்கும் ஆவணத்தை வைத்து ஒப்பீடு செய்தேன். அந்த ஆவணத்தை தேடி கண்டுபிடித்து வருமாறு நான்

மீண்டும் கேட்கவில்லை. 14.05.1993 தேதியிட்ட வள்ளி என்ற கையெழுத்திற்கும் ஏ2 கையெழுத்திற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அது இயற்கையான மாறுபாடு ஆகும். ஏ1 மற்றும் ஏ2 என்று குறியீடு செய்யப்பட்ட கையொப்பங்களிலும் ஒவ்வொரு எழுத்திலும் மாறுபாடு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அந்த மாறுபாடு வெறும் கண்களுக்கே தெரிகிறது என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏ2 மற்றும் ஏ3 கையொப்பங்களுக்கு இடையே வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அது இயற்கையான மாறுபாடு ஆகும். ஒரே நாளில் ஒரு நபர் கையொப்பம் இடும்போது அதில் சிறு சிறு வேறுபாடு இருக்கும். யாராலும் ஒரே மாதிரியான கையொப்பத்தை போட முடியாது. ஏ1 மற்றும் ஏ3 கையொப்பங்களுக்கு இடையே வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அது இயற்கையான மாறுபாடு ஆகும். ஏ1 மற்றும் ஏ4 கையொப்பங்களுக்கு இடையே வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அது இயற்கையான மாறுபாடு ஆகும். கம்பாரிசன் சார்ட்டில் ஏ2, ஏ3 என்ற கையொப்பங்கள் எஸ்2 முதல் எஸ்13 வரை உள்ள கையொப்பங்களுடன் மாறுபாடு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே பக்கத்தில் ஏ2, ஏ3 என்ற கையொப்பங்களுக்கும் க்யூ1 முதல் 6 வரை உள்ள கையொப்பங்களுக்கும் இடையே நான் மேற்கூறிய வகையில் சொன்ன மாறுபாடு தான் காணப்படுகிறது

என்று சொன்னால் சரியல்ல. சர்ச்சைக்குரிய கையொப்பங்கள் வாதியின் கையொப்பங்கள் தான் என்றும் நான் வாதிக்காக நான் ஒரு பொய்யான அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் ஆவணங்களை பார்க்காமல் ஜெராக்ஸ் நகலில் உள்ள கையொப்பத்தை ஒப்பீடு செய்தது தவறு என்றால் சரியல்ல. முழு ஆவணத்தை சமர்ப்பிக்காமல் பகுதி ஆவணத்தை வைத்து ஒப்பீடு செய்ததே தவறு என்றால் சரியல்ல. காவல் துறையிடமிருந்து வேண்டுகோள் எதுவும் வராமல் என்னுடைய வாடிக்கையாளருக்கு சாதமாக ஒரு அறிக்கையை தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தனியார் ஆய்வகத்திற்கு கட்சிக்காரர்களும், வழக்கறிஞர்களும் பொதுவாக வந்து ஆவணங்களை ஆய்வுக்கு கொடுத்து வருகிறார்கள். நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.